www.tamilarangam.net


# ஈழச் செய்தி

EPIC

ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம். த.பெ. இல: 5551 சென்னை 94.

செப்டம்பர் அக்டோபர் — கடிதம் 31.


## இலக்குகளை சென்றடைந்து இலட்சியங்களை வென்றெடுத்திட

# ஈழத் தேசிய விடுதலை முன்னணியை வலுப்படுத்துவோம்



ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்தவரை, இன்றைய காலகட்டத்தில் ஐக்கிய முன்னணிக்கே முன்னுரிமை கொடுக்கிறோம்.

—பத்மநாபா
— செயலாளர் நாயகம்
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி



ஒவ்வோர் கால கட்டத்திலும் ஈழத் தேசிய விடுதலை முன்னணி தமிழ் மக்களுக்கான சரியான தீர்வை முன் வைக்கும்

சிறீ சபாரத்தினம்
— செயலதிபர்
— தமிழ் ஈழ விடுதலை இயக்கம்



மூன்று மாத காலமாக இருந்து வந்த ஒப்பந்தம் சரியானபடி அமுல் நடத்தப்படவில்லை. பேச்சு வார்த்தை நடைபெற வேண்டுமானால் போர் நிறுத்தம் உறுதிப்படுத்தப் பட வேண்டும்.

— பிரபாகரன்
தமிழீழ விடுதலை புலிகள்



மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்துத்தான் நாங்கள் திம்பு பேச்சு வார்த்தைகளில் முடிவெடுப்போம்.

— பாலகுமார்
ஈழப்புரட்சி அமைப்பு



"இப்பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆசிரியர் குறிப்பு

யுத்த நிறுத்தம் நீடிக்கப்பட்டுள்ளது. உண்மையான சமாதானத்தின் பால் தமக்குள்ள அக்கறையாலும், இந்திய அரசின் வேண்டுகோளின் படியும் **ஈழத் தேசிய விடுதலை முன்னணி** யுத்த நிறுத்த நீடிப்புக்கு இணங்கியுள்ளது.

ஏற்கனவே யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருந்த போது சிறீலங்கா ஆக்கிரமிப்பாளர்களால் அப்பட்டமாக மீறப்பட்டதை யாவரும் அறிவர்.

ஈழ விடுதலை அமைப்புக்கள் தமது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளாது இருந்தபோதும் சிறீலங்கா ஆயுதப் படைகள் ஆத்திர மூட்டல்களிலும், தேடுதல் வேட்டைகளிலும் ஈடுபட்டுக் கொண்டே இருந்தன.

ஈழத்தின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது யாழ் குடாநாட்டில் ஆக்கிரமிப்பாளரின் ரோந்துகளும், மக்கள் மீதான தாக்குதல்களும் ஓரளவு குறைந்து இருந்தன. ஆனால் ஏனைய பிரதேசங்களில் யுத்த நிறுத்தத்துக்கு முன்பிருந்த சூழ்நிலை பரவாயில்லை என்னும் அளவுக்கு நிலைமைகள் கட்டுமீறிப் போயின. சிறீலங்கா ஆயுதப் படைகளும், அவர்களால் பயிற்சியளிக்கப்பட்ட கூலிக் குண்டர்களும் ஈழ மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட படுகொலைத் தாக்குதல்கள், கொள்ளைகள், தீவைப்புக்கள் சொந்த மண்ணிலேயே ஈழ மக்களை அகதிகளாக்கும் நடவடிக்கைகளின் தொடர்சியையே குறிக்கின்றன.

ஈழத்தின் கேந்திர முக்கியத்துவம் மிக்க திருக்கோணமலைப் பிரதேசத்தில் ஈழ மக்களை இல்லாதொழிக்கும் உச்சகட்ட நடவடிக்கைகள் யுத்த நிறுத்தக் கால கட்டத்தில் முன்னெப்போதையும் விட உக்கிரமாக்கப்பட்டுள்ளன.

முப்படைகளுடன் இணைந்து சிங்கள காடையர் கும்பல் ஊர்க்காவல் படை என்ற போர்வையில் தமிழ்க் கிராமங்களை சூறையாடி பச்சிளம் குழந்தைகளை துடிக்கத் துடிக்க சுட்டுக் கொல்லும் கோரத்தனமும், அகதி முகாம்களில் அடைந்து கிடப்போரையும் அழித்தொழிக்க அகதிமுகாம்கள் மீது குண்டு வீசும் நாசகார நடவடிக்கைகளும் திருமலையில் நாளாந்த நடைமுறையாகியிருக்கிறது.

இஸ்ரேலிய மொசாட்டின் ஆலோசனைப்படி லெபனானில் பாலஸ்தீன அகதிகள் முகாம் மீது குண்டு மழை பொழிந்த சியோனிச வெறியரின் பாணியில் ஈழ அகதிகள் முகாம்களும் குண்டுவீசி அழிக்கப்படுகின்றன. அழிக்கப்பட்ட அகதிகள் முகாம்கள் பயங்கரவாதிகளின் முகாம்கள் என்றும், கொல்லப்பட்ட அகதிகள் பயங்கரவாதிகள் என்றும் சிறீலங்கா அரசு தனது வஞ்சக நடவடிக்கைகளுக்கு வக்காலாத்து வாங்கிக் கொண்டிருக்கிறது.

ஆக யுத்த நிறுத்தம் என்பது ஈழ மக்களுக்கு நிம்மதியையோ, தமது பிரச்சனைகளுக்கு சாமதானபூர்வமான முறையில் அரசியல் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையையோ கொடுக்கவில்லை.

மாறாக ஈழப்போராளிகளின் கைகள் கட்டுண்டு கிடக்க, எதிரிகளின் வெறித்தனமும், வேட்டையாடல்களும் எல்லை மீறிப்போகவே யுத்த நிறுத்தம் பயன்படுகிறது என்கின்ற நிலை ஈழத்தில் ஏற்பட்டு விட்டது.

இதைவிட ஆயுதக் குவிப்பிலும், தனது பட்டாளங்களுக்கு சர்வதேச பயங்கரவாத அரசுகளிடம் இருந்து பயிற்சிகளை பெறுவதிலும் சிறீலங்கா அரசு முனைப்பாகவே உள்ளது

இந்த நிலையில் திம்புவில் ஈழமக்களின் பிரதிகளுடன் சிறீலங்கா அரசுப் பிரதிநிதிகள் நடத்திய பேச்சு வார்த்தையின் இரு கட்டங்களும் எவ்வித முன்னேற்றத்தையும் அளிக்கவில்லை. எந்த காரிய சாத்தியமுள்ள, ஈழமக்களின் அபிலாசைகளை கணக்கில் எடுத்துக் கொண்ட அரசியல் தீர்வையும் சிறீலங்கா அரசு திம்புவில் முன்வைக்கவில்லை.

ஏற்கனவே நடைபெற்று தோல்வியில் முடிந்த சர்வகட்சி மகாநாட்டில் முன்வைத்த கண்துடைப்பு திட்டங்களை மீண்டும் திம்புவில் முன்வைத்தின் மூலம் சிறீலங்கா அரசைப் பொறுத்தவரை பேச்சுவார்த்தை என்பது காலம் கடத்தும் தந்திரோபாயமாகவே கருதப்படுகிறது என்பது ஐயத்துக்கிடமற்றதாகியது.

ஈழ மக்களின் பிரதிநிதிகள் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டிருந்த வேளையில் ஈழத்தின் வீதிகளில் மக்களின் குருதி பெருகி ஓடிக் கொண்டிருந்தது. தமது கரங்களை குருதியில் நனைத்துக் கொண்டு அந்தக் கரங்களைக் காட்டி இவை நட்புக் கரங்கள் தான் குலுக்கிக் கொள்ளுங்கள் என்று ஈழ மக்களின் பிரதிநிதிகளைப் பார்த்து சிறீலங்கா அரசு கூறியது.

தனது கொலைக் கரங்களை நீட்டியபடி, மேலும், மேலும் பலநூறு மக்களின் குருதியில் குளித்தபடி பேச்சுவார்த்தை என்ற நாடகத்தை அரங்கேற்றிவரும் சிறீலங்கா அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள முடியாது என்று ஈழத்தேசிய விடுதலை முன்னணி முடிவெடுத்தது. ஏனைய இரு விடுதலை அமைப்புக்களும் இந்த முடிவையே தாமும் எடுத்தன. இதனால் திம்பு பேச்சுக்கள் முறிவடைந்தன.

ஆனால் மீண்டும் யுத்த நிறுத்தம் நீடிக்கப்பட்டுள்ளதும், பேச்சுவார்த்தை மீண்டும் நடைபெறலாம் என்ற சூழ்நிலையும் நிலவுகின்றது.

எந்தக் கட்டத்திலும் **பேச்சுவார்த்தைக்கே இடமில்லை என்னும் முடிவு விவேகமானதல்ல.** ஆனால் ஈழமக்களின் அடிப்படையான அரசியல் அபிலாசைகள், சிறீலங்கா அரசின் நயவஞ்சகமான சூழ்ச்சிகள், பிரித்தாளும் தந்திரங்கள் என்பவற்றை விடுதலை அமைப்புக்கள் குறிப்பாக ஈழத் தேசிய விடுதலை முன்னணி கவனத்தில் எடுத்து தனது முடிவுகளை எடுக்க வேண்டும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, தெற்காசியப் பிராந்தியத்தியத்தில் அமைதி, ஆயுத மோதல்களுக்கான களங்களை இல்லாதொழித்தல் என்னும் சர்வதேசிய நலன்களை பேணும் வேளையில் ஈழமக்களின் அபிலாசைகள், இலட்சியங்கள், நியாயபூர்வமான நலன்கள் என்பவையும் பிரதானமானவைதான். எந்த நாட்டின் நலனுக்கும் ஈழமக்களின் நலன்கள் எதிராகாமல் பார்த்துக் கொள்ளும்போது எந்த நாட்டின் நலனுக்காகவும், பிறிதொரு நாட்டின் நலன் **கீழ்ப்படுத்தப்பட முடியாதது** என்பதே உண்மையான **சர்வதேசியமாக இருக்கமுடியும்.**

போராடும் மக்களின் குரல்

www.tamilarangam.net



# அம்மாவும், அப்பாவும், உறவினரும் இரத்த வெள்ளத்தில்.,

## வெறியர்களின் வேட்டைபற்றி ஈழச்சிறுமி கூறுகிறாள்..



திருகோணமலை துவரங்காட்டில் தமிழர் வீடுகளுக்குள் புகுந்த சிங்கள ராணுவத்தினர் வெறிகொண்டு வேட்டையாடினர். உடமைகளை இழந்து உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தப்பியோடிய அப்பாவி மக்கள் மீது ராணுவ வெறியர்கள் பின்னாலிருந்து துப்பாக்கியால் சுட்டு விளையாடினர். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடியவர்களைத் துரத்திச் சுட்டதில் 10 அப்பாவித் தமிழர்கள் மாண்டனர். வெறியர்கள் கையிலிருந்த துப்பாக்கிக் குண்டினால் காயமடைந்தவர்களில் வள்ளி மாணிக்கம் என்ற 9 வயதுச் சிறுமியும் ஒருத்தி, இந்தச் சிறுமி வலது காலிலும் கையிலும் துப்பாக்கிக் குண்டுகளோடு திருகோணமலை நகர ஆஸ்பத்திரியில் கவனிப்பாரற்றுக்கிடக்கிறாள்.

நிருபர் ஒருவர் சிறுமியைப் பேட்டி கண்டார்:

“எங்கள் வீட்டைநோக்கி இரு வெடி குண்டுகள் வந்து விழுந்தன. நான் ‘அம்மா’ என்று அலறிக் கொண்டு ஓடினேன். அப்போது அப்பாவும், அம்மாவும், சித்தியும், மாமியும், மாமியின், இரு பிள்ளைகளும் இரத்த வெள்ளத்தில் துடித்துக் கொண்டிருந்தார்கள். எங்கள் வீட்டு வாசலுக்கு ஓடிவந்த மேலும் இரு ஆமிக்காரர்கள் என்னை நோக்கிச் சுட்டார்கள். நான் பாக்கு மரத்தடியில் ஒட்டிக் கொண்டேன். எனது அப்பாவுக்கும் வேலையில்லை. அம்மா மட்டும் கடைகளுக்கு அப்பம் சுட்டு விற்றுவருகிறார். எங்கள் குடும்பம் மிகவும் வறியது” என்று கவலை தோய்ந்த முகத்தோடு கூறிய அந்த 9 வயதுச் சிறுமி.

“கடந்த 17ம் திகதி நாலாபக்கமும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன. பல வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. நாங்கள் பயந்துபோய் வீட்டுக்குள்ளேயே இருந்தோம். அப்போதுதான் இச்சம்பவம் இடம் பெற்றது” என்று தெரிவித்தாள்.

## வீட்டுக்குள் பூட்டி வைத்து உயிரோடு கருக்கப்பட்ட மூன்று உடல்கள்

ஆகஸ்ட் 15 —

பாவற் குளத்தில் 3 பேரை வீட்டோடு வைத்து ராணுவத்தினர் தீயிட்டுக் கொளுத்தினர். புதன் கிழமை இரவு 10 மணிக்கு மேல் வீட்டினுள் புகுந்த ராணுவ வெறியர்கள், அனைத்து அக்கிரமங்களையும் செய்து முடித்து விடும் ஆவேச வெறியில் கோர தாண்டவத்தை முடித்து விட்டு வெளியே வருகையில் வீட்டைத் தீ வைத்துக் கொளுத்திச் சென்றனர். வீட்டினுள் தியாகராஜா, சிவபாலன், பத்மராஜா ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் தீச் சுவாலைக்குள் துடிதுடித்து மாண்டார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஈழப் போராளிகளுடன் யுத்த நடத்தும் செலவினம் உயர்கிறது

ஆகஸ்ட் 28 —

ஈழ விடுதலைப் போராளிகளை ஒழித்து, ஈழ மக்களை தனது அடக்கு முறைக்குள் ஒடுக்கி வைத்திருப்பதற்காக சிறீலங்கா அரசு ஏராளமான பொருட் செலவில் தன் ராணுவ பலத்தை விஸ்தரித்து வருகிறது. ராணுவச் செலவினம் தன் கையை மீறி விட்டது குறித்து நிதியமைச்சர் ரொனி டிமெல் பின்வருமாறு புலம்பியுள்ளான்; "1985-ம் ஆண்டு பட்ஜட்டில் பாதுகாப்புச் செலவுகள் உட்பட செலவு போக 64 மில்லியன் டொலர் மேலதிக வருமானமாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், உயர்ந்த பாதுகாப்புச் செலவினம் காரணமாக 185 மில்லியன் டொலர் துண்டு விழும் எனத் தெரிகிறது.

தமிழ்ப் பிரிவினை வாதிகளுடனான போராட்டத்தில் செலவினம் 137 மில்லியன் டொலராக இருக்கும் எனத் திட்டமிடப்பட்டது. ஆனால் ஆண்டிறுதியில் இத்தொகை 222 மில்லியன் டொலராக இருக்கும்.

அரிசி இறக்குமதிக்காக இதுவரைக்கும் 25.9 மில்லியன் டொலர் செலவிடப்பட்டது. ஆனால் கெரில்லாக்களின் நடவடிக்கைகளால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவினம் 75 மில்லியன் டொலர்களாகும். உலகச் சந்தையில் தேயிலையின் விலை வீழ்ச்சியும் நமது பொருளாதாரத்தை மிகவும் பாதித்துள்ளது" இவ்வாறு அலறியுள்ள ரொனிடிமெல்லை அலட்சியம் செய்து விட்டு மேலும் ராணுவச் செலவுகள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

14 விமான தளங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. சிகிரியா, கொக்கிளாய், கடுகுரந்தா, வவுனியா, அநுராதபுரம், மின்னேரியா, மட்டக் களப்பு, அம்பாறை ஆகிய இடங்கள் தொடர்ந்து விஸ்தரிக்கப் படவுள்ளன. மட்டக்களப்பு விமான தளத்தை விஸ்தரிப்பதற்காக 500 மீட்டர் சுற்றளவிலுள்ள 230 தமிழ்க் குடும்பங்களையும், 2 பாடசாலைகளையும், 2 கோயில்களையும் உடனே காலி செய்யுமாறு சிறீலங்கா அரசு, ராணுவத்தினூடாக உத்தர விட்டுள்ளது. ⌑

## கொலைஞர்களைக் கண்டு ஓடிய மீனவர்கள் கொல்லப்பட்டனர்

ஆகஸ்ட் 26 —

திருக்கோயில் பகுதியில் ரோந்து சுற்றிச் சென்ற சிறீலங்கா கொமாண்டோக்களைக் கண்டு பீதியடைந்து ஓடிய அப்பாவி மீனவர்களை நோக்கி கொமாண்டோக்கள் சிரித்தவாறே சுட்டனர். நான்கு மீனவர்கள் துப்பாக்கிக் குண்டு துளைத்து ஸ்தலத்திலேயே மரணமானார்கள், சிதறியோடிய மக்களை கொமாண்டோக்கள் துரத்தித் துரத்திச் சுட்டதில் காயமடைந்து விழுந்தவர்களை, பிடித்துக் கொண்ட வெறியர்கள், பூட்ஸுகளாலும் துப்பாக்கிப் பின்புறங்களாலும் அடித்து உதைத்து சித்திரவதை செய்தனர். 15 மீனவர்களை உதைத்து வதைமுகாமுக்கு இழுத்துச் சென்றுள்ளனர். ⌑

## தாயோடு சேர்த்துக் குழந்தைகளையும் கொன்றனர்

செப் 22, அம்பாறை கல்வெட்டு என்னும் கிராமத்தில் "வீடியோ" படம் ஓடிக்கொண்டிருந்தது. 30 க்கு மேற்பட்ட தமிழர்கள் இங்கு திரைப்படம் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது 'ஊர்க்காவல் படை' என்ற பெயரில் பயங்கர ஆயுதங்களுடன் நடமாடும் சிங்களக் காடையர்கள் அந்த வீட்டை முற்றுகையிட்டனர். உள்ளே இருந்தவர்கள் பீதியால் தப்பி ஓட முற்பட்டபோது ஊர்க்காவல் படை குண்டர்களின் துப்பாக்கிகள் குண்டு மழை பொழிந்தன. இந்த நரபலி வேட்டையில் 15 பேர் பலியானார்கள். 10 பேர் படுகாயமடைந்தனர். இந்த கோரச் சம்பவத்தின் போது தாயையும் அவரது இரு சின்னம் சிறு குழந்தைகளையும் கூட கொடியவர்கள் கொன்று குவித்தனர். ⌑

## 'இரத்த ஜூலையை' ஈழம் மறக்கவில்லை

ஜூலை 25, 26, —

*1983* ஜூலை வன் செயல்களின்போது உயிர் நீத்த போராளிகள் மற்றும் பொது மக்களை நினைவு கூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்து முகமாக ஈழப்பிரதேசமெங்கும் 25, 26 தேதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

பொலிஸ், ராணுவரோந்து எதுவும் இடம் பெறவில்லை. வீதிகள் வாழைமரங்களால், தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, பிரதான சந்திகளில் தோரண வளைவுகளும், குட்டிமணி, தங்கத்துரை ஆகிய போராளிகளின் முழு அளவிலான வர்ணப் படங்களும் பொருத்தப்பட்டிருந்தன. அதிகாலையில் ஆங்காங்கே சரமாரியான குண்டுவெடிச் சத்தங்கள்...? யாழ், புகையிரத நிலையத்தில் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புகைவண்டிக்கு விஷமிகள் எவராலும் சேதம் எதுவும் ஏற்பட்டு விடாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆயுதம் தாங்கிய ஈழ இளைஞர்கள் காவல் புரிந்த வண்ணமிருந்தனர். வவுனியாவில் சிங்களப் பாடசாலைகள் உட்பட சகல பாடசாலைகளும் மூடப் பட்டிருந்தன. மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளிலும் தனியார் பஸ்சேவை உட்பட போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டு நகர் வெறிச்சோடிப் போயிருந்தது. ⌑




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொலைப் பட்டாளங்களின் வேட்டைக்களமாகும் திருமலை மண் பறிபோகிறது.

## ★ 75000 பேர் அகதிகள் ★ எதிரிப் படைகளிடம் 300 ஈழக்குழந்தைகள்

செப் 23, சிறீலங்கா கொலை, பாதக ஆக்கிரமிப்பாளர்கள் திட்டமிட்ட முறையில் திருக்கோணமலைப் பகுதியில் கொலை, கொள்ளை கற்பழிப்பு, தீயிடல் நடவடிக்கைகளை உக்கிரமாக்கியுள்ளனர்.

இதுவரை திருமலையெங்கும் கட்டவிழ்த்து விடப்பட்ட படுகொலைத் தாக்குதல்களால் 75 ஆயிரம் தமிழ் பேசும் மக்கள் அகதிகளாக காடுகளுக்குள் தஞ்சமடைந்துள்ளனர்.

இதனுடன் 300 ஈழக் குழந்தைகள் சிறீலங்கா படைகளால் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

வாழும் மக்களை ஒழிப்பது, வளர்ந்து வரும் தலை முறையை கருவறுப்பது என்ற சிங்கள இனவாதம் திருமலையில் எல்லை மீறிப் போகிறது.⌑

செப்டம்பர் 4 —

திருக்கோணமலையில் சிறீலங்கா ராணுவ வெறியர்களும், ஊர்காவல்படைக் குண்டர்களும் கொலை, கொள்ளை, தீவைப்பு, கற்பழிப்பு வெறியாட்டங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

படுக்கையிலிருந்து, சிவன் கோவிலடி வரை பல்வேறு கிராமங்களில் தமிழர் வீடுகள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன.

வீர்நகர், சிங்கநகர், பாலையூற்று. திருக்கடலூர், மாந்தோட்டம், அரசடி, பிரதான வீதி, நெல்சன் தியேட்டரடி, ஓசில், உவர்மலை, சீனக் குடா, மடத்தடி, வினாயகர் கோயிலடி போன்ற இடங்களில் தொடர்ந்து தமிழர்களைக் கொன்று வீடுகளுக்குத் தீ வைத்து சிங்கள மிருகங்கள் வேட்டையாடுகின்றன.

ராணுவமும், ஊர்காவல் படையும் ஆத்திரம் கொண்டு சுட்டதில் பல தமிழர்கள் குண்டுகளுக்கு இரையானதாக சிறீலங்கா அரசின் வானொலி அறிவித்தது.⌑




செப்டம்பர் 15,

மூதூர், கிளிவெட்டி, சம்பூர் பகுதிகளில் மட்டும் இதுவரை 100 க்கு மேற்பட்ட தமிழர்கள் கொலை செய்யப்பட்டு விட்டனர். எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்பதால் அகதி முகாம்களிலும் காடுகளிலும் ஆங்காங்கே அஞ்சி ஒடுங்கிப் போயிருக்கும் தமிழ் மக்கள் அனைவரும் பகல் இரவு முழுவதையும் பயத்துடன் விழித்த படியே கழிக்கிறார்கள்.

இது தவிர திருகோணமலை மாவட்டத்தில் திடீர் திடீரென ஆங்காங்கே தமிழ் மக்கள் காணாமற் போய் விடுகின்றனர். சிங்கள வெறியர்கள் இவர்களைக் கடத்திச் சென்று கொன்றுவிட்டு மயானத்தில் மணலினுள் புதைத்துள்ளனர். சுமார் 25 சடலங்கள் வரை தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

சின்னக் கந்தய ஜங்ஷன் என்ற மடத்தடியிலிருந்து 700 மீட்டர் தொலைவிலுள்ள மாதா கோவில் வரை உள்ள வீடுகளில் புகுந்து தமிழர்களை வெளியே இழுத்து வேட்டையாடியதில் 7 பேர் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். வீடுகள் சூறையாடப்பட்டுக் கொளுத்தப்பட்டன.

பீலியடியிலிருந்து – கன்னியா ஜங்ஷன் வரை உள்ள வீடுகள், ப. நோ. கூ. சங்கங்கள், தபால் நிலையம் மற்றும் கடைகள் எல்லாமே இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன அல்லது தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. பன்குளத்தில் இரவு 11 மணியிலிருந்து அதிகாலை 2 மணி வரை ராணுவம் கொலை வெறி கொண்டு சுட்டதில் 12 பேர் மாண்டனர். இதில் 50 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. குச்சவெளி, கிரணைக்கேணி ஆகிய கிராமங்களில் ஆயிரக் கணக்கான வீடுகள் கொளுத்தப்பட்டுள்ளன. இறந்தவர் சடலங்கள் வீதிகளில் வீசப்பட்டுக் கிடந்தன. சாம்பல் தீவு, ஆறாங்கட்டையிலும் வீடுகளை உறவினர்களை இழந்த மக்கள் வெளியேறி காடுகளில், தஞ்சம் புகுந்துள்ளனர். சாம்பல் தீவில் மட்டும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர்களை ராணுவவெறியர்கள் வரிசையாக நிற்க வைத்துச் சுட்டுக் கொன்றனர்.⌑

# ஆக்கிரமிப்பு படைகளின் காமவெறிக்கு பலியாகிய பிரான்சுப் பெண்

ஜூலை 27 'பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தம்பதிகள் கற்குடாவில் உல்லாசப் பயணிகள் விடுதியில் தங்கியிருந்தனர். சிறீலங்கா ராணுவத்தினர் இவர்களைப் போராளிகள் என்று கூறிக் கொண்டு சிவில் உடையில் ஆயுதங்கள் சகிதம் சென்று அந்த பிரான்ஸ் நாட்டுப் பெண்ணை கடத்திச் சென்று கற்பழித்துள்ளனர் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளது.⌑

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பேய்கள் அரசு செய்தால்...

ஆகஸ்ட் 15 —

சிங்கள ராணுவத்தினர் தமிழர் வாழும் கிராமங்களுக்குள் புகுந்து சோதனை செய்வதாகக் கூறி கொலை, கொள்ளை, கற்பழிப்புகளில் ஈடுபட்டு வெறியைத் தணித்து வருகின்றனர்,

வவுனியா பெரிய தம்பண்ணைப் பகுதியில் கூலிப்படையினர் சோதனை நடத்திய போது சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அப்பாவித் தமிழ் இளைஞரைத் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டதில் அவர் ஸ்தலத்திலேயே பலியானர். வெங்கலச் செட்டிகுளத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி தியாகராசாவே (35 வயது) மாண்டவராகும்.

வவுனியாவில் ஆயுதப்படையினரின் முகாம் ஒன்றுக்கு முன்பாக உள்ள சிறிய மதகு ஒன்று கண்ணி வெடியினால் தகர்ந்ததைத் தொடர்ந்து ஆயுதப் படையினர் கண்மூடித்தனமாகத்துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது 200க்கு பேற்பட்ட தமிழ்ப் பொது மக்கள் கொல்லப்பட்டனர். பல நூற்றுக் கணக்கானோர் படுகாயமுற்றனர். வீடுகள், கடைகள் கொளுத்தப்பட்டன. வவுனிய நகரம் சுடுகாடானது. அதிகாலையில் ஆரம்பித்த ராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் நாள் முழுதும் நகரையே கிடுகிடுங்க வைத்த வண்ண மிருந்தன. ஒரே அவலக் குரல்கள். மக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடி காடுகளுக்குள் பதுங்கிக் கொண்டனர். ஆண்கள் - பெண்கள் - சிறுவர் - சிறுமியர் - வயோதிபர்கள் என்று இனங்காணப்படாமலே யாவரும் வெறித்தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்டனர். மானிட சடலங்கள் ஆங்காங்கே சிதறுண்டு காணப்பட்டன. சிங்கள ராணுவத்தினர் வீடு வீடாகப் புகுந்து இழுத்துப் போட்டுச் சுட்டனர். பிணங்களை டிராக்டர்களில் அள்ளிச்சென்று எரித்தனர். குண்டடி பட்டு விழுந்தவர்களை மீண்டும் மீண்டும் சுட்டனர். நாகரீக உலகமே நாணித் தலைகுனியும்படி மீண்டுமொரு இரத்த ஜூலையை அரச பயங்கரவாதிகள் நிகழ்த்திக் காட்டினர்.

கூலிப்பட்டாளங்கள் அன்று முழுவதும் அக்கிராமங்கள் முழுதும் கொலைவெறியோடு அலைந்தன. பொது மக்களைச் சொல்லொணாத் துன்ப துயரங்களுக்குள்ளாக்கி நாச வேலைகளை முடித்துக் கொண்டு முகாமுக்குத் திரும்பின.

மூன்று முறிப்பு. தச்சன் குளம், தோணிக்கல், கல்லாண்டான் குளம், பூந்தோட்டம், குடியிருப்பு, வயிரவபுளியங்குளம் ஆகிய கிராமங்கள் பொது மக்கள் யாருமின்றி வெறிச்சோடிப் போயின.

ஆறு அகதிகள் முகாம்களில் 5000 தமிழ் மக்கள் அகதிகளாயுள்ளனர். மீண்டும் வெறிதணியாத படையினர் ஹெலி காப்டரில் வந்து அக்னி திராவகத்தை (அசிட்) வீசினர். 40 சடலங்களை மட்டும் பொது மருத்துவ மனையில் சேர்ப்பித்த ராணுவத்தினர் ஏராளமான சடலங்களை தாமே எரித்துள்ளனர். ¤

### பிணம் தின்னும் பேய்கள் வெறிகொண்டு அலைகின்றன,

ஆகஸ்ட் 19 —

திருகோணமலை துவரங்காட்டு பகுதியில் புகுந்த சிங்கள ராணுவ வெறியர்கள் 21 தமிழர்களைச் சுட்டுக் கொன்றனர். நிலாவெளிதுவரங்காடு பிரதான வீதி ஓரமாகவுள்ள தமிழர் வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்திச் சாம்பலாக்கினர்.

சிறீலங்காராணுவக் கூலிகளும், ஊர்காவல் படைக் குண்டர்களும் நிலாவெளி, துவரங்காடு, சாம்பல்தீவு ஆகிய இடங்களில் சோதனை செய்யப் போவதாக நுழைந்து தங்கள் மனித வேட்டையை நிகழ்த்தி முடித்தனர். தமிழர்கள் பலத்த காயங்களோடு வேறிடங்களையும், காடுகளையும் தேடி ஓடித் தஞ்சமடைந்தனர். ¤

## இந்தியாவிலிருந்து பயங்கரவாதிகள் வருகை சிறீலங்கா சுதந்திரக்கட்சி துணைத்தலைவர் கூச்சல்

ஆகஸ்ட் 28 —

"மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய பகுதிகளுக்கு இந்தியாவிலிருந்து வந்த பயங்கரவாதிகள், அவற்றைத் தமது ஜென்ம பூமி என்று உரிமை கொண்டாடி வருகின்றனர்" என்று உளறிக் கொட்டியிருக்கிறான் மதவாச்சி எம்.பி.யும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின்துணைத் தலைவனுமான மைத்திரிபால சேன நாயக்கா.

இவனோடு பாராளுமன்றத்தில் பேசிய ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி. ஒருவன்; "சிங்களவர்களை 150 தொகுதிகளிலிருந்து தெரிவு செய்து வட பகுதியில் குடியேற்ற திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் இன்றோ சிங்களவர்கள் அங்கிருந்து இங்கு வந்திருக்கின்றனர். ஆயுதக் களஞ்சியம் இன்று காலிக்கு வந்து விட்டது. அடுத்து நாம் கடலில்தான் போய் விழ வேண்டும்..." என்று ஆளும் கட்சியின் சதித்திட்டத்தையும் அம்பலப்படுத்தி அலறியுள்ளான். ¤

### அநுராவின் அலறல்

கெரில்லாக்கள். பெரியதொரு மோதலுக்கு தயாராகிறார்கள். சிங்களவர்களுக்கு புதைகுழி வெட்டப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா..? வடக்கிலே ஹர்த்தால் போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. ஆனாலும் ஹர்த்தால் தோல்வியில் முடிந்ததாகப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. மக்களுக்கு எதையும் மூடி மறைக்கக் கூடாது. வீண்வதந்திகள் பரவிவிடும். மார்க்ஸிய வழியில் சோஷலிச ஆட்சியை ஏற்படுத்தும் திட்டத்துடன் தீவிரவாதிகள் செயல் படுகின்றனர். வடபகுதியில் தடுப்பு நிலையங்களை எலலாம் அகற்றியது ஏன்? கண்காணிப்பு வலயம் இருக்கிறதா? அதனைத் தாண்டித்தான் தீவிரவாதிகள் சாரி சாரியாக வந்து கொண்டிருக்கின்றனர். வடக்குக் கிழக்கிலே 2 லட்சம் சிங்களவர்களைக் குடியேற்றுவதாகக் கூறினீர்கள். அந்தத்திட்டத்தை ஏன் இடைநிறுத்தி உள்ளீர்கள்?......" இப்படியெல்லாம் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அலறியிருக்கிறார். ¤

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இலக்குகளை மறந்தவர்களின் ஈனச்செயல்

தர்மலிங்கம்

ஆலால சுந்தரம்

# படுகொலை





தூக்கிய துப்பாக்கிகளின் இலக்குகளை மறந்த தனிநபர் பயங்கரவாதிகளால் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி உறுப்பினர்களான தர்மலிங்கமும், ஆலால சுந்தரமும் கோழைத்தனமாகக் கொல்லப் பட்டனர். இந்த ஈனச் செயலை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) மிக வன்மையாகக் கண்டித்துள்ளது. ¤

கடத்தபட்ட -- துரைசிங்கம் எங்கே?

தமிழீமக்கள் விடுதலைக்கழமே

பதில் என்ன?

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வெகுஜன அமைப்பொன்றைச் சேர்ந்த துரைசிங்கம் என்பவரை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் கடத்திச் சென்றனர். இதுவரை அவர் விடுதலை செய்யப்படாததால் அவர் கொலை செய்யப் பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

உமாமகேசுவரன் தலைமையிலுள்ள தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தவர்கள் (PLOT) தமது தோழரை பற்றிய தகவலை தெரிவிக்க வேண்டும் என்றி கோரி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி துண்டுப் பிரசுரமொன்றில் கேட்டுக் கொண்டுள்ளது.

துரைசிங்கம் அவரது வீட்டில் வைத்து ஆயுத பாணிகளாய் வேனில் வந்த PLOT தோழர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

எமது தோழனை விடுதலை செய்யும் படி எமது தோழர்கள் பல முறை வேண்டுகோள் விடுத்தனர். பல முறை பேச்சுக்களும் நடத்தப்பட்டன. ஒன்றுக்கும் சரியான பதில் இல்லை. இன்று வரை PLOT தோழர்கள் தவறாகக் கடத்தப்பட்ட எமது தோழரை விடுதலை செய்வார்கள் எனக் காத்திருந்தோம். ஆனால் எமது நம்பிக்கைகள் பொய்யாகிப் போன நிலையில் PLOT தோழர்களுக்கு எமது நிலையைப் பகிரங்கமாக தெரிவிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டோம்.

உங்களால் கடத்தப்பட்ட எமது தோழன் ஏதாவது தவறு விட்டிருந்தால் அது பற்றி எம்முடன் பேசி ஒரு முடிவுக்கு வரமுன்வராதது ஏன்?

PLOT தோழர்களே! கடந்த காலங்களில் உங்களால் நாம் பல முறை துன்புறுத்தப்பட்டோம். மட்டு நகரில் எமது தோழன் கந்தசாமி உங்கள் தோழர்களால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உண்மையை உணராது இதே பாணியில் நீங்கள் தொடர்ந்து செயற்பட்டால் அப்போது எமது தோழர்கள் கடத்தப்படுவதையும், கொல்லப்படு வதையும் பார்த்துக்கொண்டு நாம் மௌனமாக இருப்பதை எமது மக்களே ஏற்கமாட்டார்கள். ஏன் நீங்கள் கூட ஏற்கமாட்டீர்கள்.

தோழமையுடன் வேண்டுகிறோம். கடத்தப் பட்ட எமது தோழனை விடுதலை செய்யுங்கள் பொது எதிரிக்கெதிரான போராட்டத்தில் சக இயக் கங்களுடன் கைகோர்த்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளது. ¤

www.tamilarangam.net





# ஈழத் தேசிய விடுதலை முன்னணிச் செய்திகள்

ஈழத் தமிழர்களை ஒரு தனி தேசிய இனமாக அங்கீகரிக்கும் வரை, ஓர் அர்த்தமுள்ள நிரந்தரத் தீர்வு காணமுடியாது என்று "ஈழதேசிய விடுதலை முன்னணி" திட்டவட்டமாக கூறியுள்ளது.

"ஈழத் தமிழர்களைத் தனித்த ஒரு தேசிய இனமாக அங்கீகரித்து அவர்களது பிரதேச வாழ்தகைமையை உறுதி செய்ய வேண்டும். தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் இலங்கைத் தீவைச் சொந்தமெனக் கருதும் அனைவரினதும் குடியுரிமை உட்பட ஜனநாயக உரிமைகள் அனைத்தும் கிடைக்கச் செய்ய வேண்டும். சிறீலங்கா அரசு ஈழத் தமிழர்களின் இந்த நியாயமான கோரிக்கைகளை அங்கீகரித்து புதிய யோசனைகளை முன்வைக்காதவரை அர்த்தமுள்ள ஒரு நிரந்தரத் தீர்வு என்பது காணமுடியாது; என ஈழதேசிய விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE), தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF), ஈழப்புரட்சி அமைப்பு (EROS) ஆகிய ஈழ தேசிய விடுதலை முன்னணி அமைப்புக்கள் நான்கும் கூட்டாக இந்த அறிக்கையை வெளியிட்டன.

சிறையிலுள்ள அரசியல் கைதிகளில் 643 பேரை விடுதலை செய்வதாக திம்புவில் சிறீலங்கா அரசின் தூதுக்குழு வாக்குறுதி அளித்தது. ஆனால் இதுவரை பூசாவிலிருந்து 25 பேரும், வவுனியாவிலிருந்து 3 பேரும், யாழ்ப்பாணத்திலிருந்து 22 பேரும் மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளார்கள். எதுவித கூச்சமுமில்லாமல் கொடுத்த உறுதியை மீறுகிற சிறீலங்கா ஆட்சியாளர்களின் ஏமாற்று, அவர்களின் நோக்கத்தைச் சந்தேகிக்க வைக்கிறது.

சிறீலங்கா அரசின் கபடத்தை வெளிப்படுத்திய ENLF அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது!

"நாங்கள் நியாயத்திற்காகப் போராடுகிறோம், எங்கள் மக்களுக்கு அமைதியும், சுதந்திரமும், பாதுகாப்பும் ஏற்பட வேண்டும் என்பதற்காகப் பாடுபடுகிறோம். எனவேதான் ஒரு நிரந்தரத் தீர்வும், சுதந்திரத்துக்கான உத்தரவாதமும் எங்கள் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக அது பற்றி ஆராய்வதற்கான பேச்சுக்களில் பங்கேற்க இசைந்தோம். சிறீலங்கா அரசு திம்பு பேச்சுக்களின் போது ஆக்கபூர்வமான எந்த யோசனையையும் முன் வைக்காதது கண்டு நாங்கள் ஏமாற்ற மடைந்தோம்; ஏற்கனவே நம்து மக்களால் ஏற்கப்படாத பழைய யோசனைகளை சிறீலங்கா' அரசின் குழு மீண்டும் தெரிவித்தது. சிங்கள அரசின் இப்போக்கு தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அதற்கு அக்கறையில்லை என்பதையே காட்டுகிறது.

"நாங்கள் நியாயத்திற்காகப் போராடுகிறோம், எங்கள் மக்களுக்கு அமைதியும், சுதந்திரமும், பாதுகாப்பும் ஏற்பட வேண்டும் என்பதற்காகப் பாடுபடுகிறோம். எனவேதான் ஒரு நிரந்தரத் தீர்வும், சுதந்திரத்துக்கான உத்தரவாதமும் எங்கள் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக அது பற்றி ஆராய்வதற்கான பேச்சுக்களில் பங்கேற்க இசைந்தோம். சிறீலங்கா அரசு திம்பு பேச்சுக்களின் போது ஆககபூர்வமான எந்த யோசனையையும் முன் வைக்காதது கண்டு நாங்கள் ஏமாற்ற மடைந்தோம்; ஏற்கனவே நமது மக்களால் ஏற்கப்படாத பழைய யோசனைகளை சிறீலங்கா' அரசின் குழு மீண்டும் தெரிவித்தது. சிங்கள அரசின் இப்போக்கு தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அதற்கு அக்கறையில்லை என்பதையே காட்டுகிறது.

> எங்களைப் பொறுத்த மட்டில் மேற் சொன்ன நான்கு லட்சியங்களை நாங்கள் எடுத்துக் கூறினோம். அந்த நான்கு லட்சியங்களும் அடிப்படையானவை ஈழ விடுதலை இயக்கத்தின் அடித்தளமே அந்த நான்கு லட்சியங்களில் தான் அடங்கியுள்ளன.

அவைபற்றி தமிழ்ப் பிரதிநிதிகளோடு பேசுவதற்கு முன்பாகவே அமைச்சரவைக் கூட்டம் கூட்டி அவற்றை சிறீலங்கா அரசு நிராகரித்துள்ளது.

www.tamilarangam.net



தற்போதைய இலங்கை அரசியல் அமைப்புக்கு முரண்பட்டவையே எங்கள் லட்சியங்கள் என்பது எங்களுக்கு மிக நன்றாகத் தெரியும், தற்போதைய இலங்கையின் அரசியல் சட்டம், சிங்கள பௌத்த இனவெறிக்கு வடிவம் அமைத்துக் கொடுப்பதாகவும், புத்த மதத்தை அரசாங்க மதமாகக் கொண்ட ஒரு சிங்கள நாட்டை உருவாக்குவதாகவும், சிங்கள மொழியை மட்டுமே அரசியல் தொடர்பு மொழியாக ஆக்குவதுமாக உள்ளது என்பதை நாங்கள் அறிவோம், இந்த இனவெறி முறை தமிழர்கள் என்ற ஒரு தேசிய இனம் இருப்பதையே மறுக்கிறது என்பதையும், இத்தகைய அமைப்பின்கீழ் ஒரு நிரந்தர அரசியல் தீர்வு காண்பது இயலாது என்பதையும் நாங்கள் அறிவோம்.

ஒரு கூட்டாட்சி முறை குலைந்து போகுமானால், அப்போது சுயநிர்ணய உரிமை இருக்க வேண்டும் என்பதற்காகவே அந்த லட்சியத்தைப்பற்றி நாங்கள் குறிப்பிட்டுள்ளோம். ஒரு அரசாங்கமே முன்னின்று நடத்தும் இனப்படுகொலைகளிலிருந்து எங்களது மக்களைப் பாதுகாக்கவும், எங்களது தேசிய தனித் தன்மையைத் தழைக்கச் செய்யவும் இந்த உரிமை அவசியம். தங்களது அரசியல் எதிர்காலத்தை உருவாக்கி அமைத்துக் கொள்ள எங்களது மக்களுக்கு நியாயமான உரிமை உண்டு,

ஆகவே பாராதீனம் செய்யப்பட முடியாத எங்கள் மக்களின் மேற்கண்ட உரிமைகளை அங்கீகரிக்கும் வகையில் சிறீலங்கா அரசானது புதிய யோசனைகளை முன் வைக்க வேண்டும். அது ஒன்றுதான் அர்த்தமுள்ள நிரந்தரத் தீர்வுக்கு வழி வகுக்கும்''.

இவ்வாறு அந்தக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.¤

## போர்நிறுத்த நீடிப்பு—நிபந்தனை

செப் 21, போர் நிறுத்த நீடிப்புக்கு ஈழத் தேசிய விடுதலை முன்னணி சில நிபந்தனைகளை விதித் துள்ளது.

* பயங்கரவாதத் தடைச் சட்டம், நெருக்கடி நிலைகள் நீக்கப்பட வேண்டும்.
* யுத்த நிறுத்த கால கட்டத்தில் வடக்கு, கிழக்கில் ஜனத்தொகை விகிதத்தை மாற்ற முயற்சிக்க கூடாது.
* 'மொசாட்' எஸ். ஏ. எஸ். சி. ஐ. ஏ. கூலிப் படைகள் வெளியேற வேண்டும்.
* ஆயுதப்படையினரை பாகிஸ்தானுக்கு இராணுவப் பயிற்சிக்கு அனுப்புவது நிறுத்தப் படவேண்டும்.
* கடமையில் இல்லாத நேரங்களில் கடைகளுக்கு வரும் சிறீலங்கா படைகள் ஆயுத பாணியாக வரக்கூடாது.
* ஆயுதக் குவிப்பு நிறுத்தப்பட வேண்டும்.
* கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீயீடல் நிறுத்தப்பட வேண்டும்.¤

தமிழ் பேசும் மக்களின் விருப்பங்களையும், உரிமைகளையும் புறக்கணிக்கும் தீர்வை நாம் அங்கீகரியோம்.

— ராஜீவ்காந்தி



## ராஜீவ் காந்தியுடன் ஈழத் தலைவர்கள்...

புதுடெல்லியில் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியை ஈழத்தேசிய விடுதலை முன்னணித் தலைவர்களான சிறீ சபாரத்தினம், பத்மநாபா, பிரபாகரன், பாலகுமார் ஆகியோர் சந்தித்து உரையாடினர்.

ஈழத்தின் இன்றைய அரசியல் சூழ்நிலை, ஈழ மக்களின் நியாயமான அபிலாகைகள் பற்றி இந்த சந்திப்பின் போது இந்தியப் பிரதமருக்கு ஈழத்தலைவர்கள் எடுத்துக் கூறினர்.

சிறீலங்கா அரசு யுத்த நிறுத்தத்தை மீறிவருவதையும், ஈழமக்கள் படுகொலையாகிக் கொண்டிருப்பதையும் இதறகு இந்தியா ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் ஈழத்தலைவர்கள் கூறினர்.

தமிழ் பேசும் மக்களின் நியாயமான விருப்பங்களையும், உரிமைகளையும் புறக்கணிக்கும் தீர்வு எதையும் இந்தியா அங்கீகரிக்காது, என்று ஈழத் தலைவர்களுக்கு உறுதியளித்த திரு ராஜீவ்காந்தி 'ஈழத்தேசிய விடுதலை முன்னணியை எவ்வித நிர்பந்தமும் நாம் செய்யமாட்டோம்' என்றும் தெளிவாக தெரிவித்தார்.¤

## போராடும் ஈழமக்களுக்கு பேராதரவு வழங்கிட தமிழகத்தில் பொது வேலை நிறுத்தம்—உண்ணாவிரதம்.

செப் 23, ஈழ மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு பரந்த அளவிலான எதிர்ப்பைக் காட்டவும், ஈழப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு தமிழக மக்களின் பேராதரவைக் காட்டவும் செப்டம்பர் 24-ம் தேதி தமிழகமெங்கும் பொது வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், இந்தியக் கம்யுனிஸ்ட் கட்சி, ஜனதா கட்சி, இந்திரா காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இதில் பங்கு கொள்வதுடன் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபடுகின்றனர்,

செப் 24 அன்று ரயில்கள், பஸ்கள் மற்றும் எந்தப் போக்குவரத்தும் நடைபெறாது. இதே வேளை விமான சேவையையும் நிறுத்துமாறு தமிழக அரசு இந்திய மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.¤

www.tamilarangam.net



# உலக மாணவர், இளைஞர் விழா




சென்னையில் நடைபெற்ற ஈழ மாணவர் பொது மன்றத்தின் உலக, இளைஞர் மாணவர் தினம்

ஜூலை 27 —

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மாணவர் அமைப்பான ஈழமாணவர் பொது மன்றத்தால் உலக இளைஞர், மாணவர் தினம் கொண்டாடப்பட்டது. சென்னையில் தேவநேயப் பாவாணர் நூலகக் கட்டிடத்தில் இத்தினத்தை முன்னிட்டும், சோவியத் யூனியனில் நடைபெறும் உலக இளைஞர் மாணவர் விழாவிற்கு பேராதரவு தெரிவிக்கு முகமாகவும், 1983 ஜூலைப் படுகொலைத் தினங்களை நினைவு கூர்ந்தும் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஈழமாணவர் பொது மன்றத்தைச் சார்ந்த தோழர் சுகீந்திரன் தலைமை வகித்தார். அனைத்துக் கல்லூரி மாணவர் பிரதிநிதிகள், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தைச் சேர்ந்த தோழர் வீரபாண்டியன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர் ஜீவா, ஈழப்புரட்சி அமைப்பைச் சேர்ந்த தோழர் முகிலன், தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த தோழர், பாப்பா, ஈழமாணவர் பொதுமன்ற உறுப்பினர்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் தலித் ஆகியோர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்.

சிறீலங்கா வதை முகாமில் படுகொலை செய்யப்பட்ட விடுதலைப் போராளிகளுக்கு வீர வணக்கத்துடன் ஆரம்பித்த இக்கூட்டத்தின் ஊடாக உலக இளைஞர், மாணவர் விழாவிற்கு வாழ்த்துச் செய்தி ஒன்றும் அனுப்பப்பட்டது. நீடித்த சமாதானம், சிறந்த வருங்காலம், பல நாட்டு மக்களின் தேச விடுதலை என்பவற்றை நோக்கி முன்னேறுவோம். ஏகாதிபத்திய எதிர்ப்பு ஒருமைப் பாட்டைக் கட்டிக் காப்போம் என்று அச்செய்தியில் ஈழ மாணவர் பொதுமன்றம் தெரிவித்துள்ளது. ☐

## கோவையில் 'இரத்த ஜூலை' நினைவு அஞ்சலி

ஜூலை 27 —

83 ஜூலை இனச் சங்காரத்தில், சிங்கள இன வெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட ஈழத் தமிழர்களின் 2 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலிப் பொதுக் கூட்டம் கோவையில் நடைபெற்றது. சனிக் கிழமை மாலை 5 மணிக்கு கோவை தெப்பக்குளம் திடலில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பும் (SOLT), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஈழ மாணவர் பொதுமன்றமும் (GUES) இணைந்து நடத்தினர்.

கவிஞர் சிற்பி தலையில் கவியரங்கமும், தோழர் ராகவன் தலைமையில் கருத்தரங்கமும் இடம் பெற்றது. ''சூலைப்படுகொலைகள்'' என்ற தலைப்பிலான கவியரங்கத்தில் கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர், கருத்தரங்கில் தோழர் கேசவன் (விடுதலைப் புலிகள்), தோழர் ஈழ மணி (EPRLF) தோழர் பல்லவன் (SOLI), தோழர், வளவன் (GUES) கா. சுப்புராயன், M.L.A., கோவை கு. இராம கிருட்டினன், புலவர் சா. மருதவாணன் ஆகியோர் உரையாற்றினர். ☐

83 ஜூலை இனச்சங்காரத்தின் நினைவாக 'இரத்த ஜூலை' என்னும் ஒரு சுவரொட்டியை ஈழ தேசிய விடுதலை முன்னணி (ENLF) வெளியிட்டுள்ளது. இரத்த ஆற்றின் மேல் எழுந்த கரங்களின் இலட்சியதாக அறிவிப்பாக அது அமைந்துள்ளது.

## எலும்புத்துண்டுகள் வேண்டாம் ஈழ மாணவர்கள் எழுச்சி

திம்பு பேச்சுவார்த்தைகளில் சிறீலங்கா அரசுப் பிரதி நிதிகள் ஆக்பூர்மவற்ற திட்டங்களை முன் வைத்து காலம் கடத்துவது ஈழமக்களிடையே பெரும் அதிருப்தியை கிளப்பியுள்ளது.

ஈழமக்களின் போர்க்குணத்தை மழுங்கடிக்கவே படுகொலை அரசு இவ்வாறு நாடகமாடுகிறது என்று ஈழமக்களிடையே பரவலான கருத்து நிலவுகிறது.

அண்மையில் யாழ்ப்பாண பாடசாலை மாணவிகள் ஆயிரக்கணக்காக ஒன்று திரண்டு ஆர்ப்பாட்ட பேரணிகள் நடத்தினார்கள்.

'எலும்புத்துண்டுகள் எமக்கு வேண்டாம்' 'ஈழமே ஒரே தீர்வு' 'போராட்டம் தொடரட்டும், 'இறுதி வரை போராட நாம் தயார்' என்று மாணவிகள் முழக்கங்களை எழுப்பினார்கள் ☐

## எதிரியின் மத்தியில் எங்கள் நிலையை எட்டுத் திசையும் எடுத்துச் சொல்லுங்கள்

வெலிக்கடை சிறையில் சாகும் வரை உண்ணா விரதமிருக்கும் போராளிகள் ஈழமக்களுக்கு விடுக்கும் செய்தியை தாங்கிய பிரசுரமொன்றை ஈழமாணவர் பொதுமன்றம் வெளியிட்டுள்ளது.

'எங்களுக்கிங்கே எழுத வாசிக்க எதிரி தருவது எதுவும் கிடையாது. எனவே நீங்கள் எங்கள் நிலையை எட்டுத் திசையும் எடுத்துச் சொல்லுங்கள்' என்று அப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது. ☐

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முஸ்லிம்கள் மீது பீரங்கித் தாக்குதல் அகதிகள் முகாமுக்குள் குண்டுவீச்சு

திருக்கோணமலை மாவட்டத்தில் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் சிங்கள ராணுவத்தினர் பீரங்கி தாக்குதல் நிகழ்த்தினர். திங்களன்று இடம் பெற்ற இந்த வெறித்தாக்குதலில் பலநூற்றுக் கணக்கானோர் வீடுகளை இழந்து அகதிகளாயினர். முஸ்லிம் மக்கள் பெருவாரியாக வாழும் கிராமமான கிண்ணியா போர் நடந்து முடிந்த இடமாக பீரங்கித் தாக்குதலினால் சேதமடைந்திருந்த கட்டிட இடிபாடுகளோடு வெறிச்சோடிக் காணப்பட்டது.

அன்றையதினம் ராணுவம் அகதிகள் முகாமுக்குள்ளும் குண்டுமாரி பொழிந்தது. 12,000 பேரைக் கொண்ட அந்த அகதிமுகாமை ராணுவத்தினர் பீரங்கி கொண்டு தாக்கியதில் பலர் காயமுற்றனர். ஒரு பெண் ஆசிரியை கவலைக்கிடமான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

மேலும் ஆங்காங்கே வெறிகொண்ட ராணுவம் பீரங்கியால் சுட்டதில் 10 இந்து ஆலயங்களும் இடிந்து தரைமட்டமாகின.

நேற்றுக் காலை 10 மணியளவில் இடம் பெற்ற மற்றுமொரு தாக்குதலில், தமிழ் மீனவர்களுக்குச் சொந்தமான வள்ளங்களும், வலைகளும் சிங்களப் படைகளால் குவித்து வைத்துக் கொளுத்தப்பட்டன. 10ம் குறிச்சி, வீரநகர் பகுதிகளில் சிவில் உடையில் ராணுவமும், ஊர்காவல் படையும், இவர்கள் ஆதரவோடு வந்திருந்த சிங்களக் குண்டர்களும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை நடத்தினர்.

சண்முக வித்தியாலயத்திலும், புனிதமரியம்மாள் தேவாலயத்திலும் மட்டுமே புதிதாக 5458 தமிழ் அகதிகள் வந்துள்ளனர். இவர்கள் பாதுகாப்பற்ற நிலையிலும், தமிழகத்திற்குத் தப்பிவர முடியாமலும் அல்லலுற்ற வண்ணமுள்ளனர்.¤

## மொசாட்டின் கால் தடங்கள் ...

நீர்ப்பாசனத் திட்டக் குடியேற்றமும், தமிழர் பிரதேசத்தில் சிறீலங்கா அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கும் ஒரு வழிமுறையாகும். இந்தக் குடியேற்றங்கள் மூலம் தமிழ்மக்களின் பாரம்பரிய நிலப் பிரதேசத்தைச் சிறிது சிறிதாக அரித்து அபகரித்துக் கொண்டு ஈழமக்களை நாடற்றவர்களாக்குவது சிங்கள அரசின் நீண்டகால திட்டமாகும்.

இதற்குத் துணையாகத் தனது கொலைக்காரக் கூட்டாளியான இஸ்ரேலை ஊடுருவ அனுமதிக்கிறது J. R. அரசு.

இஸ்ரேலிய மொசாட் பட்டாளத்தைச் சேர்ந்த சிலர் மகாவலி நீர் பாயும் புதிய நிலப் பிரதேசங்களில் தங்கி அரசின் அனுமதியோடு விவசாய விரிவாக்கப் பணிகளில் ஈடுப்பட்டிருக்கின்றனர். இவர்களே மகாவலி நீர் பாயும் புதிய காணிப் பகுதிகளிலும் செயல்படவுள்ளனர். இப்புதிய நிலப்பகுதி ஈழப் பிரதேசமான கிழக்கு மாகாணத்தில் பெரும்பகுதியை உள்ளடக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இஸ்ரேல் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதார ஒத்துழைப்பு மீதான தடையையும் J.R. அரசாங்கம் நீக்கி உள்ளது. இதன் மூலம் இஸ்ரேலின் சிறீலங்காவுடனான தேயிலை வர்த்தகம் அதிகரிக்கும். சிறீலங்காவும் இஸ்ரேலிடமிருந்து போதியளவு ஆயுதக் கொள்வனவு செய்து கொள்ளும். அரிப்பெடுத்த சூரங்கு கொள்ளிக்கட்டையால் .சொறிந்து கொண்டது போல விடுதலைப் போராளிகளின் கெரில்லா நடவடிக்கைகளிலிருந்து தற்காத்துக் கொள்ள இஸ்ரேலிய சதிக் கும்பலை அணைத்துக் கொள்கிறது சிறீலங்கா.

சிறீலங்காவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இயங்கும் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவுக்குத் தலைவனாக அஸ்ரின் கார்ணி என்னும் தந்திர நரி உள்ளான். இவனைத் தொடர்ந்து புதிதாக இப் பதவிக்கு நியமிக்கப்படவுள்ள வில்செயின் என்பவன் சிறீலங்காவுக்கான இஸ்ரேலியத் தூதராகலாம் எனத் தெரிகிறது.¤




## பயணிகள் மீது வெறியர்கள் பாய்ச்சல்

ஆகஸ்ட் 15 —

ராணுவத்தினரின் உதவியோடு சிங்களக் குண்டர்கள் பஸ்ஸிலும், ரயிலிலும் பயணம் செய்யும் தமிழர்களை மறித்து வெட்டிக் கொலை செய்து வருகிறார்கள். கொழும்பிலிருந்து திருகோண மலைக்கு வந்து கொண்டிருந்த மினிபஸ் ஒன்றைக் கந்தளாயில் வைத்து மறித்த ஆயுதமேந்திய சிங்கள வெறியர்கள், பிரயாணிகளை மோசமாகத் தாக்கினர். வாள் கத்தி, கோடரி, பொல்லுகளால் தாக்கியதில், பயணம் செய்த 6 தமிழர்கள் துடிதுடித்துச் செத்தனர். பலர் படுகாயமடைந்தனர். பஸ்ஸில் வந்த இரு தமிழப் பெண்களைக் குண்டர்கள் இழுத்துச் சென்றனர்.¤

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மீண்டும் ஒரு "வெலிக்கடை" தங்காலைச் சிறையில் மனித வேட்டை

சிறீலங்கா இனவெறி அரசினால் தங்காலை சிறையில் வைத்து ஆறு ஈழ வாலிபர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். சிறீலங்கா வதை முகாம்களில் கொல்லப்படும் ஈழ மக்கள் தொகை அதிகரித்து வருவதையும், தங்காலைப் படுகொலைகளை கண்டித்தும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி துண்டுப் பிரசுர மொன்றை வெளியிட்டுள்ளது.

அனைத்து முற்போக்கு, ஜனநாயக சக்திகள், சக விடுதலை அமைப்புகள், வெகுஜன ஸ்தாபனங்கள் ஆகியவற்றுக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இப்பிரசுரம் ஊடாக அறைகூவலும் விடுத்துள்ளது.

* அரசியல் கைதிகளின் படுகொலையைக் கண்டித்து
* அரசியல் கைதிகளுக்குரிய அந்தஸ்தை வலியுறுத்தி
* அரசியல் கைதிகளின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் கோரி

போராட்ட நடவடிக்கைகளில் இறங்குமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறைகூவல் விடுத்துள்ளது.¤

## எதிரியின் முகாம்களில் பாலியல் வதைகள் அதிகரித்து வரும் அரசியல் கைதிகளின் அவஸ்தைகள்

அரசியல் கைதிகளை அடிமை போல் நடத்தாதே என்கின்ற தலைப்பிலான பெரியளவிலான சுவரொட்டிகள் யாழ்ப்பாணக் குடாநாடெங்கும் காணப்படுகின்றன. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியால் இச் சுவரொட்டிகள் வெளியிடப்பட்டுள்ளன.

'ஈழ மக்களே! நமது அரசியல் கைதிகள் என்ன அநாதைகளா?'

சிறீலங்கா அரசே! பெண் அரசியல் கைதிகளை பாலியல் வதைகளுக்கு உள்ளாக்காதே!

சிறிலங்கா வதை முகாம்களில் அரசியல் கைதிகளுக்கு மருத்துவ வசதியில்லை. போதிய உணவு வழங்கப்படுவதில்லை. புத்தகம் பேனா கொடுக்கப்படுவதில்லை. மலசல கூடம் போன்ற அடிப்படை வசதிகளே ஏதுமில்லை. ஆனால் மிருகத்தன வதைகளுக்கு குறைவேயில்லை.

அனைத்து முற்போக்கு, ஜனநாயக சக்திகளே! அரசியல் கைதிகளின் அந்தஸ்தை வலியுறுத்துங்கள், அவர்களின் நலனுக்காகப் போராடுங்கள், நீதி விசாரணை நடத்த சிறிலங்கா அரசை நிர்ப்பந்தியுங்கள். ஒடுக்கும் எஜமானர்களுக்கு எதிராக ஒடுக்கப்படும் கரங்கள் ஒன்று சேரட்டும்.

மேற்கண்ட வாசகங்கள் EPRLF சுவரொட்டிகளில் காணப்பட்டன.¤

## இந்திய வெளியுறவு அமைச்சரும்...

### சிறீலங்கா பிரதமரும்...

சிங்கள-தமிழ் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றுக்காக முயற்சிக்கும் அதே சமயம் அங்குள்ள தமிழர்களின் உரிமைகளை விடடுக் கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை. என இந்திய வெளியுறவு இணையமைச்சர் திரு. குர்ஷித் ஆலம்கான் ராஜ்ய சபையில் தெரிவித்துள்ளார்,

சபையில் கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்களைப் பொறுமையுடன் இருக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்ட அமைச்சர், ஈழமக்கள் கொடுமைப்படுவதை உணர்ந்து கொள்ளும் அதே வேளை அந்தத் தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளை விட்டுக் கொடுத்து தீர்வு காணப்படுவதை இந்தியா அனுமதிக்காது' என வலியுறுத்தியுள்ளார்.

இதற்குப் பின்னர் சிறீலங்கா பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் பிரேமதாசா, "எங்களுக்கு வாக்களித்து ஆட்சியமைக்க அனுப்பி வைத்த சிங்கள மக்களின் நலன்களே பிரதானமானவை. அவர்களைப் பகைத்துக் கொண்டு தமிழ் மக்களுக்கு எந்த உரிமைகளையும் வழங்கி விட மாட்டோம்" என்று உறுதியளித்துள்ளார்.¤

## பகைவனின் முகாம்களில் ஈழ வாலிபர்கள் வதையின் பின் கொலை

ஆகஸ்ட் 23 —

சிறீலங்கா சிறைகளில் அடைத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் கொடூர சித்திரவதைகளுக்குப் பின் இறந்துள்ளனர்" என்று யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் வெளியிட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"1948-ம் ஆண்டு மலையக மக்களின் பிரஜாவுரிமைகளைப் பறிப்பதில் ஆரம்பித்த சிறீலங்கா அரசு 1958, 77, 79, 81, 83 என வரிசைக்கிரமமாக திட்டமிட்ட முறையில் தமிழ் பேசும் மக்கள் மீது வன்முறைகளைக் கட்ட விழ்த்து விட்டது. பின்னர் பயங்கரவாத தடைச் சட்டம் மூலம் பல அப்பாவி இளைஞர்கள் கைது செய்யப்பட்டு முகாம்களில் கோரமான முறையில் துன்புறுத்தப்பட்டனர். இவ்வாறு சித்திரவதை செய்கையில் இளைஞர்கள் சிலர் இறக்கவும் நேரிட்டது" என்றும் அத்துண்டுப் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.¤

## தீக்கிரையான திருமலைக் கிராமம்

ஆகஸ்ட் 23 —

திருகோணமலைப் பகுதியிலுள்ள கன்னியாக் கிராமத்தில் உள்ள தமிழர்களின் வீடுகள் மீண்டும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. ஜீப்வண்டிகளிலும் மற்றும் பஸ் வான்களில் ஆயுதப்படையின் உதவியோடு சென்ற சிங்களக் குண்டர்களே இந்தத் தீவைப்பு, கொள்ளையடிப்பு போன்ற அடாவடித்தனங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து, பீதியடைந்த தமிழர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி நிலாவெளி, சாம்பல்தீவு ஆகிய இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.¤

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## முஸ்லீம்மக்களின் பிரதேசங்கள் வரையறுக்கப்படும், பிரதேச சுயாட்சி வழங்கப்படும்

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பிரகடனம்.**

ஈழ முஸ்லீம் மக்கள் தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் நிலைப்பாட்டை விளக்கி அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் பேசும் மக்கள் மத்தியிலிருந்து உருவான முதாலாளித்துவ அரசியல் தலைமை எவ்வாறு சிங்கள இனவெறி ஆட்சியாளருடன் சமரசத்திற்கும், சரணடைவிற்கும் ஒத்துப்பாடி தமிழ் மக்களை ஏமாற்றி வந்ததோ அதுபோலவே முஸ்லீம் மக்கள் மத்தியில் எழுந்த அரசியல் தலைமையும் முஸ்லீம் மக்களை பகடைக்காய்களாக பயன்படுத்தி இருள் சூழ்ந்த எதிர்காலத்திற்கு இட்டுச் செல்கின்றனர்.

பிரிக்கப்படும் கிழக்குப் பிரதேசம் எந்த அரசின் ஆளுகைக்குட்படும், அந்த அரசின் வர்க்கச் சார்பு பற்றிய கணிப்பீடுகள் இல்லாமல் வெறுமனே ஒரு பிரதேசத்தைக் கோருவதன் மூலம் முஸ்லீம் மக்களை ஈழப் போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்தி அவர்களின் எதிர்காலத்தை சிதைக்கவே இந்தக் கோசம் பயன்படும்.

இவ்வாறு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, முஸ்லீம் மக்களுக்கு கீழ்கண்ட உத்தரவாதங்களையும் வழங்கியுள்ளது.

*ஈழத்தில் முஸ்லீம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களை வரையறுத்தல்.

* அப்பிரதேசங்களை முஸ்லீம் மக்களின் பிரதேசங்களாக அங்கீகரித்தல்.

*இச் சபைகளை முஸ்லீம் மக்களின் அரசியல் பீடமாக அங்கீகரித்து இச்சபையூடாக மேற்படி வரையறுக்கப்பட்ட முஸ்லீம் மக்களின் பிரதேசங்களில் அவர்களின் பிரதேச சுயாட்சியை உத்தரவாதப் படுத்தல்.

*ஈழத்தின் அரசு முஸ்லீம் மக்கள் தொடர்பாக எந்த வொரு சின்னம் சிறு நடவடிக்கைக்கும்.

'முஸ்லீம் மக்கள் சபையின்' பரிபூரண ஆலோசனை பெறப்படும்.

இதனுடன் மேலும் சில உத்தரவாதங்களும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி எமது பிரகடனத்தை புரிந்து கொண்டு வீரம் செறிந்த ஈழ விடுதலைப் போரில் தமது கரங்களை ஒன்றினைத்துக் கொள்வதன் மூலம் அமையும் சுதந்திர ஈழமே முஸ்லீம் மக்களின் பாதுகாப்புக்கும், வளமான வாழ்வுக்கும் உத்தரவாதமளிக்கும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது. ☐

## கிராமியத் தொழிலாளர் சங்கத்தின் பிரகடனம்புதியவிடியலுக்கான போராட்டம் வீரமிக்க போராட்டத்துக்கு ஆதரவு.

சிறீலங்கா அரசின் சித்திரவதை முகாம்களான சிறைக் கூடங்களில் எவ்வித விசாரனையும் இன்றி ஆண்டுக்கணக்காக சிறைவைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கி அரசியல் கைதிகளுக்குரிய எவ்வித அந்தஸ்தும் வழங்காமல் காட்டுமிராண்டித்தனமான ஒடுக்குமுறைகளுக்கெதிராக எதிரியின் முகாமில் எமது இளைஞர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வெஞ்சிறையில் மகத்தான போராட்டம் நடத்தும் இளைஞர்களுக்கு ஆதரவாக இதுகாலவரை பல்கலைகழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் வாலிபர்கள் என்ற நிலையிலிருந்து கிராமியத் தொழிலாளர்களும், விவசாயிகளும் கூட பல்வேறு விதமான போராட்ட வடிவங்களுடாக உங்களுடன் இணைந்துள்ள செய்தியை கிராமிய தொழிலாளர் சங்கம் வெளிப்படுத்துகிறது.

நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் எச்ச சொச்சங்களினால் இன்னமும் பாதிக்கப்பட்டு நிலமற்றவர்களாகவும், மனித உரிமையற்றவர்களாகவும் உழைப்பு சக்தியைத் தவிர வேறு எதுவுமில்லாமல் நாளாந்தம் அரை குறைப் பட்டினி வாழ்வை மேற்கொண்டு, ஒரு புதிய சமுதாய விடியலுக்காவும் போராடும் நாம், நீங்கள் நடத்தும் வீரமிக்க போராட்டங்களுக்கு எமது ஒருமைப்பாட்டை மீண்டும், மீண்டும் பிரகடனம் செய்கிறோம்.

இவ்வாறு வெலிக்கடை சிறையில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் ஈழ வாலிபர்களுக்கு ஆதரவு தெரிவித்து கிராமியத் தொழிலாளர் சங்கம் வெளியிட்டுள்ள பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☐

### முல்லைத் தீவில் எதிரிப்படைகள்...

ஆகஸ்ட் 25 —

முல்லைத்தீவு பகுதியில் மாமூலை, கனுக்கேணி, தண்ணீரூற்று ஆகிய பகுதிகளில் ஆயுதப் படை ஹெலிகாப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பிரகடனம் செய்யப்படாத யுத்த மண்டலமாக ஈழப் பிரதேசத்தை ஆக்கி, போர்ச் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள் சிறீலங்கா அரச பயங்கரவாதிகள். அவர்களின் இந்த ஆகாய மார்க்க தாக்குதலுக்கு அஞ்சி ஈழமக்கள் வெவ்வேறு இடங்களுக்கு ஓடியும் ஒளிந்தும் அபாயக் கணங்களை எதிர் நோக்கி, வாழ்வதற்காகப் போராடி வருகிறார்கள்.

முல்லைத்தீவு—தண்ணீரூற்று வீதியிலுள்ள 3ம் கட்டை என்னுமிடத்தில் நின்று கொண்ட தரைப் படையினர் ஓடிவரும் மக்களையும் வாகனங்களையும் மறித்துச் சோதனையிடுவதும், சுடுவதும், துன்புறுத்துவதுமாயிருந்தனர். வாகனங்கள் சிலவற்றைக் கைப்பற்றி எடுத்துச் சென்றனர். ஆகாய வழியாலும் தரை வழியாலும் முற்றுகையிட்டுத் தாக்குதலை நடத்திய சிங்களப் படைகளுக்கு அஞ்சி முள்ளியவளைப் பகுதிக்கு மக்கள் ஓடினர். தொடர்ந்து முள்ளியவளை வற்றாப்பளை போன்ற இடங்களிலும் ராணுவம் புகுந்து பதட்டத்தை ஏற்படுத்துகின்றனர். ☐

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெலிக்கடைச்சிறையில் போராளிகள் சாவுமுனையில்.

## பாசிச அரசு மௌனம் சாதிக்கிறது.

செப்டம்பர் 2 —

வெலிக்கடைச்சிறையில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களின் தினசரி நிலைமை குறித்து **''ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி''** வெளியிட்டு வரும் 'ஈழம் செய்திப்பலகை' சுவரொட்டியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது: **பிணக்கோலத்தில் போராளிகள் 25 வது நாள் –** அரசியல் கைதிகளின் நியாயபூர்வமான உரிமைகள் மறுக்கப்படுவதற்கெதிராக இன்று யாழ். பிராந்தியம் முழுவதும் வெவ்வேறு நிலையங்களிலிருந்து எதிர்ப்பு ஊர்வலங்கள் நடைபெறும். அனைத்து மக்களும் கலந்து கொள்ளவும்''.

இதைத் தொடர்ந்து வெவ்வேறு இடங்களில் நடை பெற்ற ஊர்வலத்திற்கு 50000க்கு மேற்பட்ட மக்கள் திரண்டிருந்தனர் யாழ் நகரிலிருந்து பல்கலைக் கழகம் வரைக்கும், இடைக்காட்டிலிருந்து கோப்பாய் வரைக்கும், பண்டத்தரிப்பிலிருந்து சங்கானை வரைக்கும், மானிப்பாயிலிருந்து மானிப்பாயின் மற்றொரு பகுதிக்கும், பருத்திதுறையிலிருந்து நெல்லியடிக்கும், பளையிலிருந்து நுணாவில் சந்திவரைக்கும், மற்றும் ஊர்காவற்றுறையிலும் ஊர்வலங்கள் நடைபெற்றன. **ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி** ஒழுங்கு செய்திருந்த இந்த ஊர்வலங்களின் முன்னால் சென்று கொண்டிருந்த டிரைக்டர் வாகனப் பெட்டியினுள்ளே சிறீலங்கா அரசபயங்கரவாதிகளின் சிறைக் கூட வதைக் கொடுமைகளைச் சித்திரிக்கும் காட்சி மக்களுக்குக் காண்பிக்கப்பட்டது.

### ஈழமெங்கும் மக்களின்

### ஆர்ப்பாட்டப் பேரணி.

அரசியல் கைதிகள் எவரும் 18 மாதங்களுக்கு மேல் விசாரணை இல்லாக் கைதிகளாகச் சிறையில் அடைத்து வைக்கப்படக்கூடாது என்பது சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற பெயரில், பொதுமக்களைச் சுட்டுக் கொல்லுதல் அல்லது பிடித்துச் சித்திரவதை செய்தல் என்பதைத் தவிர வேறெந்தச் சட்டங்களையும் மதிக்காத சிறீலங்கா அரசாங்கம், 18 மாதங்களுக்கு மேலாக எவ்வித விசாரணையுமின்றி நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களைச் சிறைகளில் அடைத்துச் சித்திரவதை செய்து வருகிறது.

இதைக் கண்டித்து வெலிக்கடைச்சிறையிலுள்ள தமிழ்க்கைதிகள் ஆகஸ்ட் 8ம் திகதியிலிருந்து மூவர் மூவராகத் தொடர்ந்து சாகும் வரை உண்ணாவிரமிருக்கத் தொடங்கியுள்ளனர். சுரேஷ், செல்லத்துரை கனகரட்ணம், கருணாகரன், டொன் சிறில் அன்ரனி, பூபாலபிள்ளை யோகேந்திரராஜா, மனோகரன் ஆகியோர் உண்ணாவிரதமிருந்து வருகின்றனர். இவர்களுக்கு ஆதரவாக ''விடுதலை செய் அல்லது விசாரணை செய்'' என்று கோரி யாழ் பல்கலைக்கழக மாணவ மாணவியர் கட்டங்கட்டமாக உண்ணாவிரதமிருந்துவருகின்றனர். ஒவ்வொரு கட்டத்திலும் 20 பேர் உண்ணாவிரதமிருக்க நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டிருக்கின்றனர், ஈழப் பிரதேசம் எங்கும் கிராமங் கிராமமாக ஆயிரக்கணக்கான மக்கள் ஆதரவு தெரிவித்து உண்ணாவிரதமிருந்து வருகின்றனர். சிறையில் உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களின் தாய், தந்தை, சகோதர சகோதரியரும் உண்ணாவிரதமிருந்து வருகின்றனர். மேலும், ...''சிறையினுள்ளே மயங்கிக் கிடக்கும் போராளிகளைப் பலவந்தப்படுத்தி நீராகாரம் செலுத்துகின்றனர். உறுதி குலையாத போராளிகள் ஊசலாடும் உயிரைக் கொண்டு ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்; நீராகாரம் செலுத்துவது உயிரைக் காக்கவா? இல்லை, உண்மையை மூடிமறைக்கவே...!'' என்று ஈழம் செய்திப் பலகை சுவரொட்டிகளில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மேலும் தெரிவித்துள்ளது. ☐



மட்டுநகரில் எதிரியால் புதைக்கப்பட்டவர்கள்

15 ம் பக்கத் தொடர்ச்சி

### தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்துக்கு ...

சர்வதேச அரங்கில் ஈழத் தேசிய விடுதலை முன்னணி அரசியல் சக்தியாக நிமிர்ந்தெழுவதை கண்டு ஆத்திரப்படும் உமா அவர்கள் ஈழத் தேசிய விடுதலை முன்னணி என்ற பொதுவான அமைப்பையே குற்றம் சாட்டி, மாசுபடுத்த முனைவது உமாவின் உள்நோக்கத்தைக் காட்டுகிறது.

இந்தியப் பத்திரிகைகள் சிலவற்றின் மூலமும், தமது வானொலி மூலமும் உண்மைக்கு மாறான செய்திகளை உமாமகேசுவரன் கட்டவிழ்த்து விடுகிறார்.

அன்பான நண்பர்களே! இன்றுள்ள நிலையில் ஐக்கியத்தை சிதைக்கவும், உங்களை வளர்க்க நல்ல பிள்ளை வேசம் போடவேண்டாம். அன்பர்களே! அவதூறும் பிரசாரங்களை உடன் நிறுத்துக! இல்லையெனில் ஆதாரங்களுடன் முன் வைக்க தயாராகுக! ☐

www.tamilarangam.net



தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினர்கள்

# கைது!

# இந்திய மண்ணில் கடத்தல் நாடக எதிரொலி!

செப் 18, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ஆரம்பகால உறுப்பினராக இருந்து செயற்பட்டவர் சந்ததியார். இவர் 'காந்திய' இயக்கத்திலும் பணியாற்றியவர், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் உமாமகேசுவரன் தலைமையுடன் ஏற்பட்ட முரண்பாட்டால் இவர் அதிலிருந்து அண்மையில் வெளியேறினார்.

இதன்பின்பு தனது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் எனக் கருதி தலைமறைவாக இருந்தார்.

செப் 18-ம் திகதி சென்னையிலுள்ள கோடம்பாக்கத்தில் வைத்து ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்று இவரைக் கடத்திச் சென்றுள்ளது,

இதன் எதிரொலியாக தமிழக போலீசார் தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினர்களான வாசுதேவா உட்பட ஐந்துபேரைக் கைது செய்துள்ளனர். ஆனால் சந்ததியார் கதி என்ன என்பது இதுவரை தெரியவில்லை.

இந்த கடத்தல் நாடகங்கள் இந்திய மண்ணில் அரங்கேறுவது தொடருமானால் ஈழப் போராளிகள் மீதான வெறுப்பும், கோபமும் இந்திய மக்களிடம் கிளர்ந்தெழும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் இனியாவது உணர்வார்களா?

இது இவ்வாறு இருக்க சில மாதங்களுக்கு முன் 'காந்தீய' இயக்கத்தைச் சேர்ந்தவரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திலிருந்து பிரிந்தவருமான 'டேவிற் ஐயாவும், சில மாதங்களுக்கு முன்பாக சென்னையில் வைத்துக் கடத்தப்பட்டார். பின்பு கடத்திய நபர்கள் சந்ததியார் எனக் கருதி தவறுதலாக இவரைக் கடத்தி விட்டதாகக் கூறி இவரை விடுதலை செய்தனர். ¤

# ஐக்கியத்தைக் குலைக்கும் எண்ணம் வேண்டாம்.

**தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்துக்கு ஒரு வேண்டுகோள்**

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் ஈழப் போராட்டத்தின் பிரதான அமைப்புக்களில் ஒன்றாக கருதப்படுகிறது

மக்களுக்கு தலைதாங்கக் கூடியதாக தன்னைத் தயார்படுத்த முனையும் ஒரு ஸ்தாபனம் மக்களிடம் உண்மையான கருத்துக்களை முன்வைத்து, ஏனைய விடுதலை ஸ்தாபனங்களுடன் வேறுபடும் தனது யுத்த தந்திர, நடைமுறைத் தந்திரங்களை தெளிவுபடுத்தி தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எதிர்ப்புரட்சிகர சக்திகளையும், எதிரியின் நடவடிக்கைகளையும் ஏனைய விடுதலை அமைப்புக்கள் விடும் தவறுகளையும் அம்பலப்படுத்துவது. சுட்டிக்காட்டுவது விமர்சிப்பது என்பது எந்த தனி நபருக்கும், விடுதலை ஸ்தாபனங்களுக்கும் உள்ள உரிமை ஏன் கடமையும் கூட.

ஆனால் எதிரியார், நண்பர் யார் என்கின்ற தெளிவில்லாத ஒரு நபரோ, அல்லது ஸ்தாபனமோ விமர்சன சுதந்திரத்தை அனுபவிக்க முற்படும் போது எதிரிகள் அம்பலமாவதைவிட, எதிரிகள் பலமடைகிறார்கள். நண்பர்கள் மத்தியில் குழப்பமும், பிணக்குகளும் ஏற்பட்டு எதிரிக்கு சாதகமான நிலை தோன்றும்.

அண்மையில் தமிழீ மக்கள் விடுதலைக் கழகத்தின் வானொலியில் அதன் செயலதிபர் உமா மகேசுவரன் என்கின்ற முகுந்தன் ஆற்றிய உரை ஈழ விடுதலை அமைப்புகளின் ஒற்றுமை மீது அவர் கொள்ளும் தீராத வெறுப்பை வெளிச்சமிட்டு காட்டிவிட்டது.

உமாமகேசுவரனைப் பொறுத்த வரையில் சிறீலங்கா அரசை அம்பலப்படுத்துவதைவிட ஈழ விடுதலை அமைப்புக்கள் மீது சேற்றை வாரியிறைப்பதில் மட்டுமே அக்கறையாக இருக்கிறார்.

**அண்மையில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர்கள் இருவர் தனிநபர் பயங்கரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலைகள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கப் படவேண்டியவை** என்பது சந்தேகமற்ற விடயமாகும்,

தனிநபர் பயங்கரவாதத்தின் தீமையை ஈழப் போராட்ட வரலாறு நன்குணர்ந்துள்ளது. **ஈழத் தேசிய விடுதலை முன்னணி இக் கொலைகளை மிக வன்மையாக கண்டித்திருந்தது.**

ஆனால் உமாமகேசுவரன் ஈழத்தேசிய விடுதலைமுன்னணியில் உள்ள ஒரு அமைப்புதான் இக்கொலைகளை செய்தது என கூறியுள்ளார்.

தான் வெளியிடும் செய்தியில் நம்பிக்கையில்லாத ஒருவர் பொதுவாக குற்றம் சாட்டி தப்பிக் கொள்ளும் முதுகெலும்பற்ற தன்மையை உமா மகேசுவரன் பின்பற்றுகிறாரா? அல்லது ENLF மீது வீண்பழி சுமத்தி ஐக்கியத்தை குலைக்க இந்த "உண்மை மனிதன்" விரும்புகிறாரா?

ஒரு அமைப்பு என்று கூறியதின் மூலம் ஏனைய அமைப்புகளுக்கு சம்பந்தமில்லை என்றாகிறது. அப்படியானால் **அந்த ஒரு அமைப்பு எது?** ஏன் அதை வெளியே சொல்லத் தயங்க வேண்டும். உமாவின் உண்மை நோக்கம் தான் என்ன?

—14ம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போரிடும் ஈழத்தை ஆதரிப்போம் என்று

# பாரிசில் 'சங்கேமுழங்கு'

செப் 27-ம் திகதி மூன்றாவது தடவையாக பாரிஸ் நகரில் 'சங்கே முழங்கு' நடைபெறுகிறது.

ஏற்கனவே "சங்கே முழங்கு" நிகழ்ச்சி பாரிசில் நடைபெற்றபோது பாரிஸ் வாழ் தமிழ் பேசும் மக்களதும், ஈழப் போராட்ட ஆதரவாளர்களதும் வரவேற்பையும், பேராதரவையும் பெற்றது.

ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையத்தால் (EPIC) நடத்தப்படும் இந்நிகழ்ச்சி மூலம் ஈழப் போர் நிதியும் சேகரிக்கப்படுகிறது.

தோழர்களே, வாசக நண்பர்களே!

கடந்தமாத ஈழச் செய்தி தவிர்க்க முடியாத காரணங்களால் வெளிவர முடியவில்லை. என்பதை அறியத் தருகிறோம்.

— ஆசிரியர்






## வெல்க! ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்டம்!

PRINTED MATTER

EPIC

Post Bag: 5551

EPIC MADRAS 600 094

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செய்தி தொடர்பு நிறுவனமான
ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலைய வெளியீடு

EELAM PEOPLE'S INFORMATION CENTRE PUBLICATION

LONDON BRANCH: EPIC B. M. BOX [illegible] LONDON WC1 [illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்